செய்தி வெளியீடு எண். 40-2017 நாள்: 15.11.2017

# விழுப்புரம் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க திருத்தப்பணிகளின் கீழ் பெயர் சேர்த்தல், திருத்தம் மற்றும் பெயர் நீக்கம் இதர கோரிக்கை மனுக்கள் பெற 30.11.2017 வரை கால நீடிப்பு செய்யப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

*****

இந்திய தேர்தல் ஆணையத்தால் 01.01.2018 தேதியை தகுதி நாளாக கொண்டு விழுப்புரம் மாவட்டத்தில் 2018 வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க திருத்தப் பணிகளின் கீழ் 03.10.2017 முதல் 31.10.2017 வரையிலான காலங்களில் பெயர் சேர்த்தல், திருத்தம் மற்றும் பெயர் நீக்கம், இதர கோரிக்கைகள் குறித்து மனுக்கள் பெறப்பட்டது. தற்போது தகுதியான எந்தவொரு வாக்காளர்களின் பெயர்கள் விடுபடக்கூடாது என்ற நோக்கத்தின் அடிப்படையில் தேர்தல் ஆணையம் ஏற்கனவே நிர்ணயம் செய்த காலக்கெடுவினை 30.11.2017 வரை நீட்டிப்பு செய்து அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் பல்வேறு கோரிக்கை மனுக்கள் பெறுவதற்கு அனுமதி வழங்கியுள்ளது.

இப்பணிகாலத்தில் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் 15.11.2017 முதல் 30.11.2017 வரை வீடு வீடாக சென்று பதிவு செயலி (ஸ்மார்ட் போன்) மூலம் குடும்ப வாரியாக கணக்கெடுப்பு, அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை புள்ளி மதிப்பை கண்டறிதல் மற்றும் சரிபார்ப்பு பணி மேற்கொள்ளும் போது, 01.01.2018 அன்று 18 வயது பூர்த்தியடைந்தவர்களின் பெயர் (அதாவது 31.12.1999 அன்றோ அல்லது அதற்கு முன்போ பிறந்தவாகளாக இருத்தல் வேண்டும்) வாக்காளர் பட்டியலில் விடுபட்டிருந்தால் பெயரினை சேர்ப்பதற்கு படிவம்-6ல் விண்ணப்பித்து கொள்ளலாம் எனவும், மேலும் 31.12.2000 அன்றோ அல்லது அதற்கு முன்போ பிறந்தவர்கள் குறித்த தகவல்களை சேகரித்தல், இறந்தவர்கள், நிரந்தரமாக விலாசம் மாறியவர்கள், வாக்காளர் பட்டியலில் பதிவான விபரங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளுதல், கைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரி விபரங்கள், அயல்நாடுவாழ் இந்தியர்களின் குடுபங்கள் பற்றி தகவல்கள் சேகரித்தல் மற்றும் இதர பணிகள் குறித்து களப்பணி மேற்கொள்ள உள்ளார்கள். இப்பணிகளை முழுமையாக முடிப்பதற்கு அனைத்து வாக்காளர் பதிவு அலுவலர்கள் (சார் ஆட்சியர்/ வருவாய் கோட்டாட்சியர்) அனைத்து உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள் (வட்டாட்சியர்கள்/ நகராட்சி ஆணையர்) ஆகியோர்களுக்கு தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் தகுந்த நல் ஒத்துழைப்பினையும், இந்த அரிய வாய்ப்பினை தவறாமல் பயன்படுத்தி கொள்ளுமாறும், அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் மூலமாக பொதுமக்களுக்கு தகுந்த விழிப்புணர்வு ஏற்படுத்திடவும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.